# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

## அசல் வழக்கு எண். 113 / 2008

**2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய் கிழமை** இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.S.வடிவேல், B.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(FAC), அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சாட்சி | : | பி.சா.1 |
| பெயர் | : | ராமசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | கருப்பகவுண்டர் |
| வயது | : | 67 |
| சமயம் | : | இந்து |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | பல்லடம் |

**முதல் விசாரணை 10.01.2023**

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

1. 30.11.2011 தேதியிட்ட எனது பெயரில் கிரைய ஆவண சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1.**

2. முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.50/2011 ல் அளிக்கப்பட்ட தீர்ப்பாணை உத்தரவு மற்றும் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.2.**

3. தாவா சொத்துக்கள் குறித்து எனது பெயர் உள்ளடங்கிய கணினி சிட்டா ( 2 எண்ணிக்கை) **பி.சா.ஆ.3** ஆகியவை குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. பிதுராஜ்ஜித சொத்து என்பதால் என் மனைவிக்கு 1/4 பங்கு சொத்து வந்தது. மற்றொரு 1/4 பாகம் என் மாமனாருக்கு வந்தது. என் மாமனாரும் அருண்குமாரும் சேர்ந்து விஸ்வநாதனுக்கு விற்று விட்டார். அந்த பூமியை நான் மீண்டும் வாங்கி விட்டேன். முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த பாகப்பிரிவினை வழக்கில் எனக்கு 1/2 பாகமும் லட்சுமிக்கு 1/4 பாகமும், 5, 6 பிரதிவாதிகளுக்கு 1/4 பாகமும் சொத்து வந்தது என்றால் சரிதான். கடந்த 01.09.2022 தேதியில் மேற்கண்ட வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் சொத்தினை பிரித்து தற்போது தனித்தனி சுவாதீனத்தில் உள்ளோம் என்றால் சரிதான்.

2. வழக்குச் சொத்து மேபுறம் ஒரு பூமியும், கிழபுறம் ஒரு பூமியும் ஆக 2 சொத்து என்றால் சரிதான். கிழபுறம் உள்ள பூமியில் எனக்கு 2.66 ஏக்கர் மேகோட்டில் வந்துள்ளது என்றால் சரிதான். கிழகோட்டில் லட்சுமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நடுவில் 5, 6 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேபுற பூமியில் வடகோட்டில் எனக்கு 1/2 பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நடுவில் அந்த பூமியில் லட்சுமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தென்கோட்டில் 5, 6 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. இந்த வழக்கு நடந்த சமயத்தில் மாவட்ட நீதிமன்றத்தில் 2 வழக்கையும் சேர்த்து நடத்த மாறுதல் கேட்டு மனுத்தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அதில் அறிவிப்பு எனக்கும் வாதிக்கும் சார்வானது என்றால் சரிதான். தற்போது 5, 6 பிரதிவாதிகள் கிழபுறம் உள்ள பூமியை கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த காலை எண்.166/5 ஏ என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் தினேஷ்குமார் என்பவருக்கு விற்று விட்டார்கள் என்றால் சரிதான். அந்த கிரையபத்திரத்தில் வாதியும், சக்திவேலும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பம்./- எஸ்.வடிவேல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
பல்லடம்.